**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 03.06.2025

அசல் வழக்கு எண் .150/2015

வா.சா. 1- காமாட்சி , க/பெ. மணி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**உங்கள் அப்பா உங்களுக்கு 2001 இல் ஒரு உயில் எழுதினார் என்றால் எழுதவில்லை. அந்த உயிலை பற்றி வழக்கில் சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன். அந்த உயிலை உங்களுடைய பொருட்செலவில் பதிவாளர் அழைத்துச் சென்று வீட்டிற்கு அழைத்துச் சென்று எழுதினீர்கள் என்றால் சரிதான். உங்கள் அப்பா சுயநினைவு இன்றி உயில் எழுதினார் என்றால் சுயநினைவு இன்றி தான் எழுதினார் நாங்கள் நான்கு பேர் அக்கா தங்கச்சி உடன் இருந்து எழுதினோம். அந்த உயில் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரி இல்லை. வழக்கு சொத்தில் சுவாதி இனத்தில் இல்லை என்றால் சரியில்லை. இந்த வழக்கில் சரியான தரப்பினரை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியில்லை. சரியான பரிகாரம் கூறவில்லை என்றால் சரியில்லை உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியில்லை. வழக்கு காலவரை சட்டத்தினால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியில்லை. இந்த வழக்கை பணத்தையும் சொத்தையும் அபகரிக்க வேண்டும் என்று தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை.**

13ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் மேற்சொன்ன குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக தெரிவித்தார். அது பதிவு செய்யப்படுகிறது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo-graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T. Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.